006005

SCERT 10 JUL 2012 CHENNAI-6.

www.kalvisolai.com

சுருக்கம்

பள்ளிக் கல்வித் துறை – அனைத்து வகை அரசு மேல்நிலை, உயர்நிலை, நடுநிலை, தொடக்கப் பள்ளிகள் , மாநகராட்சி, மெட்ரிக், ஆங்கிலோ– இந்தியன் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 2012–2013–ம் கல்வியாண்டு முதல் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை முப்பருவப் பாடநூல் முறையும், தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையும் நடைமுறைப்படுத்தி – ஆணை வெளியிடப்பட்டது – திட்டங்கள் சிறப்பாக அமைய பள்ளி நடைமுறையில் சில மாற்றங்கள் மேற்கொள்ளல் – ஆணை வெளியிடப்பட்டுள்ளது

பள்ளிக் கல்வித் (இ1) துறை

அரசாணை (1டி) எண்.264 நாள் : 06.07.2012

படிக்கப்பட்டது:

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவன இயக்குநரின், கடித ந.க.எண்.796/ஈ2/2012 நாள் 16.05.2012.

******

**ஆணை:–**

2012–13–ஆம் கல்வியாண்டு முதல் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை முப்பருவப் பாடநூல் முறையையும், தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையையும் நடைமுறைப்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது எனவும், இத்திட்டத்தின் முதன்மையான நோக்கம் மாணவர்களுக்குப் புத்தகச் சுமை, பாடச் சுமையைக் குறைத்து, மன அழுத்தமின்றிப் பாடங்களை மனப்பாடம் செய்யாமல், செயல்பாடுகள் வாயிலாகப் புரிந்துகொண்டு கற்பித்தல் ஆகும் என்றும், இம்முறைமூலம் மாணவர்கள் அறிவை மேம்படுத்துவதோடு மட்டுமின்றி, மாணவர்களின் அனைத்துத் திறன்களையும் முழுமையாக வெளிக்கொணர்ந்து நல்ல பண்புகளை உடைய ஆளுமைத் திறன் பெற்றவர்களாக உருவாக்க இயலும் என்றும் தெரிவித்து, மேற்கண்ட நோக்கங்கள் முழுமையாகவும், சிறப்பாகவும் அமைய, பள்ளி நடைமுறையில் சில மாற்றங்களை மேற்கொள்வது குறித்து ஆணை வெளியிடுமாறு மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவன இயக்குநர் அரசிடம் வேண்டியுள்ளார்.

2) மேற்காணும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவன இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலிக்கப்பட்டு பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது.

அனைத்து பள்ளிகளிலும் காலை வழிபாட்டுக் கூட்டத்தில் கீழ்வரும் செயல்பாடுகளை மேற்கொள்ளுமாறும் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமையன்று பொது காலை வழிபாட்டுக் கூட்டமும் மற்ற நாட்களில் அது வகுப்பறை நிகழ்வாகவும் அனைத்து மாணவர்களும் சுழற்சி முறையிலும் அமைக்குமாறும், சான்றாகப் பட்டியலில் உள்ள நிகழ்வான தமிழ்த்தாய் வாழ்த்தை ஒவ்வொரு மாணவனும் தன்முறை வரும்போது பாடப்பட வேண்டும். இச்செயல்பாடுகளை மேற்கொள்ள மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் வெளியிட்டுள்ள கையேட்டினைப் பள்ளிகள் பின்பற்றுதல் வேண்டும்.

www.kalvisolai.com



| வ.எண். | நிகழ்வுகள் | நிமிடங்கள் |
|---|---|---|
| 1. | தமிழ்த்தாய் வாழ்த்து | 1.30 |
| 2. | கொடி ஏற்றுதல், கொடி வணக்கம் * | 2 |
| 3 | கொடிப்பாடல் * | 2 |
| 4 | உறுதிமொழி | 4 |
| 5 | சர்வ சமய வழிபாடு * | 1 |
| 6 | திருக்குறள் மற்றும் விளக்கம் | 2 |
| 7 | செய்தி வாசித்தல் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | 4 |
| 8 | இன்றைய சிந்தனை / பொது அறிவு/ பழமொழி | 2 |
| 9 | பிறந்தநாள் வாழ்த்து | 0.30 |
| 10 | ஆசிரியர் உரை | 1 |
| | மொத்தம் | 20 |

* வாரத்தின் முதல் நாளான திங்கட்கிழமை மட்டும் செயல்படுத்தப்பட வேண்டும் மற்ற நாள்களில் செயல்படுத்த தேவையில்லை

தியானம் 5 நிமிடம்

(ii) மதிய உ ணவு இடைவேளைக்கு 30 நிமிடத்திற்கு முன்னதாக

எளிய யோகா பயிற்சி – 15 நிமிடங்கள்.

அடுத்த 15 நிமிடங்களில் கையேட்டில் உள்ளவாறு பின்வரும் பாட இணைச் செயல்பாடுகளை மேற்கொள்ளப்பட வேண்டும்.

1. விழுமக் கல்வி
2. உடல் நலக்கல்வி
3. கலைக்கல்வி
4. பணி அனுபவம்
5. சுற்றுச் சூழல் கல்வி
6. முதல் உதவி மற்றும் தற்காப்பு விதிகள்

(iii) மதிய உணவு இடைவேளைக்குப் பின்

1. வாய்பாட்டை சொல்லுதல்.
2. ஒன்று முதல் ஐந்தாம் வகுப்புவரை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இரண்டு இரண்டு சொற்களை சொல்வதை எழுதச் சொல்லுதல்.
3. ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இரண்டு இரண்டு சொற்களை சொல்வதை எழுதச் சொல்லுதல், வாக்கியமாக அமைத்தல்.

ஒவ்வொரு வாரமும் வார இறுதி வேலை நாளான வெள்ளிக்கிழமையன்று இறுதி ஒரு மணி நேரம்

www.kalvisolai.com



(iv) மாணவர்களின் பன்முகத் திறனை வெளிப்படுத்தும் வகையில் பேசுதல், நடித்தல், ஆடுதல், பாடுதல், நகைச்சுவை கூறுதல், மனக்கணக்கு கூறுதல், பொன்மொழிகள் கூறுதல், பழமொழிகள் கூறுதல், படைப்பாற்றல் போன்ற செயல்பாடுகளை ஒவ்வொரு மாணவரும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3) மேற்கூறிய செயல்பாடுகளை, அனைத்து வகை அரசு மேல் நிலை, உயர் நிலை, நடுநிலை, மற்றும் தொடக்கப் பள்ளிகள், மாநகராட்சி, மெட்ரிக், ஆங்கிலோ-இந்தியன் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் முழுமையாக செயல்படுத்திட இவ்வாணையினை சுற்றறிக்கையாக அனுப்புமாறு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவன இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

த.சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

மாநில கல்வியியல் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர், சென்னை-6,
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6
மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6

நகல்

மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.
பிற்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.